ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

का ते कान्ता धनगतचिन्ता वातुल किं तव नास्ति नियन्ता ।
त्रिजगतिसज्जनसंगतिरेका भवति भवार्णवतरणे नौका ॥

हे वातुल - அறிவில்லாத மூட
ते - உன்னுடைய
कान्ता - ஸ்திரீயானவள்
का - எவள்
धनगतचिन्ता - நீ பத்நியாகக் கருதியிருப்பவள் பொருளில் விருப்பமுள்ளவள்
तव - உனக்கு
नियन्ता - சிக்ஷை செய்கிறவர்
नास्ति - இல்லை
त्रिजगति - மூவுலகிலும்
भवार्णवतरणे - ஸம்ஸாரமென்னும் கடலைக் கடப்பதற்கு
सज्जनसंगतिः - மஹான்களுடைய சேர்க்கை என்கிற
एका - ஒன்றுதான்
नौका - ஓடமாக
भवति - ஆகின்றது.

தீயால் சூழப்பட்ட வீட்டின் மத்தியில் உறங்கும் ஒருவனை அவன் நண்பன தட்டி எழுப்பி அதினின்றும் வெளியில் செல்லும்படி செய்வதுபோல் கருணைக்கடலான ஆசார்யர் கஷ்டரூபமான ஸம்ஸாரத்தை அக்ஞானத்தால் சுகமெனக் கருதி உறங்கும் சிடனுக்கு அடியில் வருமாறு உபதேசிக்கின்றார்.

அறிவில்லாமல் ஸம்ஸாரதுக்கத்தில் மூழ்கியிருக்கும் ஹே மூடா! உன் ஸ்திரீ என்பவள் யார்? நீ அபிமானித்திருக்கிறவள் உண்மையில் உன்னிடம் பிரியமுள்ளவளல்ல; பின்னை உன்னிடமிருக்கும் பொருளில் தான் அபிமானமுள்ளவள்; உனக்கு இவ்வித மோகத்தைப் போக்கி நல்லறிவூட்டும் மஹான்கள் இல்லையா பலர் இருக்கின்றார்கள். ஆகையால் மூன்று லோகங்களில் வஸிப்பவர்களுக்கும் 'பவமெனனும் கடலைத் தாண்டுவதற்கு மஹான்களுடைய சேர்க்கையே சிறந்த கப்பலாகின்றது. அவ்விதக்கப்பலைக்கொண்டு தான் இந்தஸமுத்திரத்தைத்தாண்டலாம். சீக்கிரமாக நீ மஹான்களுடைய அனுக்கிரகத்திற்குப் பாத்திரனாகி அவர்களுடைய சிறந்த உபதேச மொழிகளால் அக்ஞானத்தையகற்றிப் பவப்பிணியைப்போக்க முயற்சிக்கவேண்டியது முக்கியம்.

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
க்ஷய ௵ புரட்டாசி-௴ ௨௧௳

# விதவா விவாஹமும் காந்தியும்.

(437-ஆவது-பக்கத் தொடர்ச்சி.)

விதவைகளிடம் இவருக்கிருக்கும் கருணையால் அவர்களை எப்படியாவது தம்பதிகளாகச் சேர்க்கவேண்டுமென்கிற இவர் அபிப்பிராயப்படி ஒருவன் நடத்தினால் அதனால் அவனுக்கு இவ்வுலகத்திலோ பரலோகத்திலோ நேரும் கஷ்டங்களுக்கு இவர் பாத்தியப்படுகிறாரா? விதவையை விவாகம் செய்துகொண்ட ஒருவனுடைய பந்து ஜனங்கள் "சாஸ்திரவிரோதமான காரியத்தைச் செய்தா" யென்று அவனை விலக்கிவிட்டால், காந்தியால் என்ன செய்யமுடியும்? வெளியிலுள்ள பெரிய கம்பெனிக்கு எழுதி பந்துக்களை வாங்கிக்கொடுப்பாரா? அல்லது பந்துக்களுக்குப் பதிலாக வேறுமனுஷ்யாளைச் சேர்த்துவிடுவாரா அப்படிச் சேர்த்துவிட்டாலும் அந்தந்த ஜாதி முறைமையில் பந்துக்களைக் கொண்டு நடைபெற வேண்டிய காரியம் எங்ஙனம் நடைபெறும். பரலோகத்தில் அனுபவிக்கப்படும் நரகதுக்கங்களை எப்படி விலக்க முடியும்? காந்தி நேரில் வந்து "நான் தான் விதவா விவாகம் செய்து கொள்ளும்படி சொன்னேன் அந்தக் குற்றத்திற்கு நீங்கள் அவர்களைத் தண்டிகக் கூடாது" என்று தர்மராஜாவிடத்தில் சிபார்சு செய்து விடுவிப்பாரா? மரித்த பிறகு யார் யார் எந்தெந்த இடத்தில் எவ்வித நிலைமையில் திண்டாடப் போகிறோமோ? அவரவர்களுக்கேற்படும் துக்கங்களையே விலக்கமுடியாமல் கஷ்டப்படும்போது பிறருடைய துக்கத்தை விலக்குவது எங்ஙனம் ஸாத்யமாகும்? இம்மையிலும் மறுமையிலும் அதிகக்கஷ்டத்திற்குக் காரணமான இந்த விதவா விவாஹத்தைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுவது அறிஞரின் செய்கையல்ல.

விதவாவிவாகம் கூடாதென்பதற்குப் பிரமாண வசனங்கள்.

मृते भर्तरि या नारी ब्रह्मचर्यव्रते स्थिता ।
सा मृता लभते स्वर्गं............... ॥ பாராசரமாதவீயம்.

தன் கணவன் காலம் சென்றபிறகு எந்த ஸ்திரீயானவள் பிரம்மசர்ய விரதத்தையனுஷ்டிக்கிறாளோ அவள் மரித்த பிறகு ஸ்வர்க்கத்தையடைகிறாள் என்று பாராசரமாதவீயத்திலும்—

अज्ञातश्च द्विजो यस्तु विधवामुद्वहेद्यदि ।
परित्यज्य च तां चैव प्रायश्चित्तं समाचरेत् ॥ आश्वलायनः ।

ஒரு துவிஜன் அறியாமல் விதவையை விவாஹம் செய்துகொண்டானேயாகில் அவளை விலக்கிவிட்டு தோஷத்தைப் போக்கவேண்டி சாஸ்திரங்களில் கூறியவாறு பிராயச்சித்தம்செய்துகொள்ள வேண்டும் என்று ஆச்வலாயனரும்

पाणिग्रहणिका मन्त्राः कन्यास्वेव प्रतिष्ठिताः ।
नाऽकन्यासु क्वचिन्नृणां लुप्तधर्मक्रिया हि ताः ॥ मनुः ।

விவாகத்திற்காக சாஸ்திரங்களிற் கூறப்பட்ட மந்திரங்களெல்லாம் ருதுவாகிறதற்கு முன்னுள்ள கன்யாபருவத்திலிருக்கும் ஸ்திரீகளை உத்தேசித்து ஏற்பட்டதேயன்றி ருதுவான ஸ்திரீகளையும் விதவைகளையும் உத்தேசித்ததல்ல ஏனென்றால் அவர்கள் தர்மத்தின் பொருட்டு ஏற்பட்ட இந்தக்கிரியையை ஒருதடவை பெற்றுவிட்டபடியால் மறுபடியும் அவர்கள் விஷயத்தில் இது இல்லாததாகவேயாகும்.

न द्वितीयश्च साध्वीनां क्वचिद्भर्तोपदिश्यते । मनुः ।

ஒரு ஸ்திரீ இரண்டு பதிகளையடையக் கூடாது என்கிற சுருதியின் கருத்தைக் கூறுகிறார்—உத்தம குணம் பொருந்திய ஸ்திரீகளுக்கு இரண்டாவது பர்த்தாவை அடையும்படி சாஸ்திரங்களில் உபதேசிக்கப்படவில்லை. என்று மனுஸ்மிருதியிலும்

न तु नामापि गृह्णीयात् पत्यौ प्रेते परस्य तु । स्मृत्यन्तरे ।

தன் பர்த்தா மரித்தபிறகு பரபுருஷனுடைய பெயரைக் கூடத் தன் வாயால் உச்சரிக்கக் கூடாதென்று ஒரு ஸ்மிருதியிலும்

एकाहारस्सदाकार्यो न द्वितीयः कदाचन ।
पर्यङ्कशायिनीनारी विधवापातयेत्पतिम् ॥ गौतमः ।

விதவையான ஸ்திரீ ஒரே வேளை ஆகாரம் செய்யவேண்டும். ஒருகாலும் இரண்டாவது வேளை ஆகாரம் செய்யக்கூடாது. விதவையானவள் கட்டில் முதலானசிறந்த படுக்கையில்படுத்தால் தன் பதியை நரகத்தில் தள்ளிவிடுகிறாள் என்று கௌதமரும்

स्त्रीणां पुनर्विवाहस्तु देवरात्पुत्रसन्ततिः ।
स्वातन्त्र्यं वा कलियुगे न कर्तव्यं कदाचन ॥ ब्रह्मपुराणम् ।

ஸ்திரீகளுக்கு கலியுகத்தில் இரண்டாவது தடவை விவாகமும், புருஷனுடைய ஸகோதரனிடமிருந்து புத்திரோத்பாதனமும், தம்மிஷ்டப்படி விதி நிஷேதங்களுக்குக் கட்டுப்படாமலிருப்பதும், எவ்வித சமயத்திலும் கூடாது என்று பிர்மமபுராணத்திலும்

मृतं भर्तारमादाय ब्राह्मणी वन्हिमाविशेत् ।
जीवन्तीचेत् त्यक्तकेशा तपसाशोषयेद्वपुः ॥ व्यासः ।

பிராம்மண ஸ்திரீயானவள் மரணத்தை யடைந்த தன் பர்த்தாவுடன் கூட அக்னிப் பிரவேசம் செய்யவேண்டும். அவ்விதம் செய்யாமல்ஜீவித்திருந்தால் கேசங்களை எடுத்துவிட்டுத்தனக்குரிய தவத்தால் சரீரத்தைச் சோஷிக்கும்படி செய்யவேண்டும் என்று வியாஸரும்,

विधवा कबरीबंधो भर्तृबन्धाय जायते ।
शिरसो वपनं कार्यं तस्मात् विधवया सदा ॥ काशिखण्डम् ।

விதவைக்குத் தலையில்கேசமுடியிருந்தால்,அதுபதியின்பந்தத்தின் பொருட்டு ஆகிறபடியால் சிரஸ்ஸில் கேசம் வைத்துக்கொள்ளக் கூடாது அடிக்கடி எடுத்துவிடவேண்டும் என்று காசி கண்டத்திலும்

न ग्राह्यत्वं न देयत्वं स्त्रियःपत्युरनन्तरम् ।
न दाता न गृहीता वा न पाणिग्रहणं पुनः ॥ स्मृतिः ।

பர்த்தா மரித்த பிறகு ஸ்திரீகளுக்கு கிரகிக்கத்தகுந்த வஸ்துவுமில்லை. கொடுக்கத்தகுந்த வஸ்துவுமில்லை. அவர்களைத் தானமாகக் கொடுக்கவும் கூடாது. கிரகிக்கவும் கூடாது. என்று ஒரு ஸ்மிருதிக்காரரும்

सकृज्जल्पन्ति राजानः सकृज्जल्पन्ति पण्डिताः ।
सकृत्कन्याः प्रदीयन्ते त्रीण्येतानि सकृत् सकृत् ॥

அரசர்கள் ஒரு விஷயத்தை ஒரு தடவை தான் சொல்லுவார்கள். பண்டிதர்களும் ஒரு தடவை தான் சொல்லுவார்கள். ஸ்திரீகள் ஒரு தடவைதான் விவாகம் செய்து கொடுக்கப்படுவார்கள். இம் மூன்றும் ஒவ்வொரு தடவை தான் ஏற்படும் என்று அறிஞரும், இந்த விஷயத்தில் இன்னும் இவைபோன்ற பல பிராமண வசனங்களிருப்பினும் விரிவாகுமென்று விடுத்தனம்.

(தொடரும்.)

உபபத்திராதிபர்.

---

# ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தின் தத்வம்.

(456-பக்கத் தொடர்ச்சி)

स्तुतिं सपित्रोरवधार्य योसौ बभूव पश्चाच्छिशुवेषधारी ।
तदानु का स्त्री सुषुवे मुकुन्दं स कस्य वीर्यादजनिष्टकायः ॥

தேவகியே ஸ்ரீ கிருஷ்ணரைப் பெற்றிருக்கவேண்டும் என்றால் பின் கூறப்படும் கேள்விக்குப் பதில் சொல்லவேண்டியதாயிருக்கும். அதாவது— ஸ்ரீ கிருஷ்ணர் முதலில் சங்கசக்ர கதாபாணியாய் ஸ்ரீவத்ஸதாரியாய் பீதாம்பரமுடுத்தவனாய் அங்கதம், கங்கணம் முதலிய ஆபரணங்களினால் அலங்கிருதனாய் வஸுதேவ தேவகிகளுக்குத் தரிசனம் கொடுத்து அவர்கள் துதிசெய்தபிறகு ஸாதாரணக் குழந்தையாக (இரண்டு கைகளுடனும் ஆபரணம் முதலியவைகளற்றவராயும்) மாறிவிட்டார் என்பது யாவருமறிந்த விஷயம். முதல் ரூபத்தைத் தேவகி பெற்றெடுத்தாள் என்றால் அச்சிறு ரூபத்தை எந்த ஸ்திரீ பெற்றெடுத்தாள்? எந்தப் புருஷனுடைய வீர்யத்தினால் உண்டாயிற்று.

यदीह जातो वसुदेववीर्यात्तदाकुतस्तस्य विभूषणानि ।
वराम्बरं कौस्तुभरत्नमुद्यत्सुदर्शनं शङ्खगदादिजातम् ॥

வஸுதேவனுடைய வீர்யத்தால்தான் ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்தார் என்றால் அவர் அணிந்திருந்த ஆடையாபரணங்கள் எப்படி இருக்கக்கூடும்? வஸுதேவனுடைய வீர்யத்திற்கே அப்பேர்ப்பட்ட சிசுவை உண்டுபண்ணும் மஹிமை இருக்கிறதெனின் அதே வஸுதேவருக்குப் பிறந்த மற்ற ஏழு குழந்தைகள் மாத்திரம் ஆடையாபரணங்களுடன் ஏன் பிறக்கவில்லை?

यदा नृसिंहाकृतिराविरासीत्पदाहतस्तम्भवराद्धि पूर्वम् ।
तदानु का स्त्री सुषुवे मुकुन्दं स कस्य वीर्यादजनिष्ट कायः ॥

வேறு எச்சமயத்திலாவது அயோனிஜராய் பகவான் அவதாரம் செய்திருந்தால் இவ்வவதாரத்திலும் அப்படியே எனலாம்; என்றால் நாஸிம்ஹாவதாரத்தைப் பாருங்கள்! கேவலமான ஒருதூணிலிருந்து யாதொரு மாதா பிதாவென்ற நியமமில்லாமலேயே ஆவிர்ப்பவிக்கவில்லையா? நாஸிம்மாவதாரம் செய்த விஷ்ணுவே இக்கிருஷ்ணரல்லவா?

ஆகையால் ஏவமாதிகாரணங்களால் பகவானுடைய அவதாரங்கள் யாவும் பிராகிருதமயமல்ல, நிர்த்தோஷ குணங்களினால் பூர்ணமானவை என்று அறியவேண்டும். ஆனால் பகவான் மாதா பிதா என்ற வியாஜத்தினால் பிறப்பதாக ஏன் வெளிக்காட்டவேண்டும் என்றால்,

दुष्टानां मोहनार्थाय सतामपि च कुत्रचित् ।
यथायोग्यफलप्राप्त्यै लीलैषा परमात्मनः ॥

துஷ்டர்களானஜீவர்களை மோஹிக்கச்செய்யவும்,சில ஸந்தர்ப்பங்களில் தம் யோக்கியதைக்குமீறி புண்யம்படைத்தஸஜ்ஜனங்களுக்கும் அவர்களின்யோக்யதைக்குத் தக்கவாறுபலன்களைக்கொடுக்கவும் அசிந்த்யாத்புத சக்திவாய்ந்த பகவானுடைய திருவிளையாடலேதவிர வேறல்ல. ஆகையால் எல்லா ஆஸ்திக சிரோமணிகளும் பகவானுடைய ஒப்பற்ற மஹிமையை மனதிற்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணாஷ்டமி விரதத்தைப் பக்தியுடன் விதியின்படி கொண்டாடி அவருடைய அவதாரகட்டத்தை (ஸ்ரீமத்பாகவதம் தசமஸ்கந்தம்) பாராயணம் செய்து ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய கிருபைக்குப் பாத்திரர்களாகவேண்டுமாறு இதனால் பிரார்த்திக்கப்படுகிறது.

ஸ்ரீமாத்வஸபா,
கும்பகோணம்.

M. ராமராவ்,
காரியதரிசி.

# மதத்திலும் சீர்திருத்தமாம்.

ஆர்யர்களே! நம் இந்தியாவென்ற ஆர்யபூமி தோன்றிய காலம்தொட்டு இதில் உதித்து மறைந்த ஜோதிபோன்ற மஹான்களுக்குக் கணக்கே கிடையாது. கேவலம் நன்மையையே செய்து வைக்கத் திருவவதாரம்கொண்டு தன் தேகத்திற்கு அதனால்வரும் கேடுகளை அனுக்கிரகமென்று மனப்பூர்த்தியாய்க கொண்டாடித் தன் வீடுபோல் உலகத்தையும் தன் பிள்ளைகளென்று தேசத்தி லுள்ள ஜீவராசிகளையும் நினைத்து உலகத்திற்குவரும் க்ஷேமலாப த்தைத் தன் குடும்பத்திற்கு வந்ததென்று எண்ணி அரும்பாடு பட்ட மஹான்களை நாம் அநுதினமும் போற்றுமலிருப்பதற் கில்லை. அப்படி ஒருவனிருப்பானாயின் அவன் நன்றிகெட்ட மஹாபாபியென்று யார்தான் கூறமாட்டார். அவ்விதமவதரித்த மஹான்களுள் கடைசியாய் நாம் போற்றுவது நமது மதாசார்யர் களைத்தான். இவர்கள் நமக்கு எவ்விதம் உபகரித்தனர். அவர்கள் அவ்வக்காலங்களிலவதரித்து அவ்வுபகாரம் செய்யாவிடின் உலகம் எக்கேடடைந்திருக்குமென்பதை அம்மஹான்களது சரித்திரத்தை நிதானபுத்தியுடன் படித்துப் பார்ப்பவர்களுக்கு நன்கு விளங்காமற் போய்விடாது. தமது வாழ்நாளை அதற்கென்று செலவுசெய்து வந்த கார்யம் முடிந்தவுடன் தன்னுலகமடைந்து விடுகின்றனர். இவர்களைத்தான் அவதாரபுருஷனென்று சொல்வோம். இவர்கள் பிறந்த நாளைக்கொண்டாடுவதைத் தான் ஜயந்தி என்று சொல்லத்தகும். இதைவிட்டுவிட்டுத்தற்காலம் தன் மனதுக்குப் பிடித்தவனை மகானென்றுகொண்டாடுவதும், அவன் பிறந்த நாளை ஜயந்தி என்று சொல்வதும் வெட்கக்கேடாய் இருக்கிறது. இது நிலையட்டும், நமது தேசம் சீர்கேட்டால் அதி சீர்திருத்தப்படுவதற்கு ஒற்றுமையான எல்லோரும் ஓரே மனதாய்ச் சீர்திருத்தலாம். வீடு சீர் கெட்டால் அங்கும் ஸகோதரர்களின் ஒற்றுமை வளர்ந்தால் சீர்திருந்தும். குடும்பம் சீர்குலைந்தால் அங்கும் யாரால் குலைந்ததோ அவனை சரிப்படுத்தி ஒற்றுமையாய் சீருக்குக் கொண்டுவரலாம். ஆகவே சீர்கெட்டவிடம் எதாயினும் அங்கு ஒற்றுமை இருந்தாலன்றி சீரடையாதென்பது திண்

ணம். எந்தச் சீர்திருத்தம் நம்மாற் செய்யலாகாதோ அங்கு நாம் பிரவிர்த்திக்க நியாயமே கிடையாது.

न हि जानपदं दुःखमेकश्शोचितुमर्हति ।

பட்டணத்திற்கு நேர்ந்திருக்கும் அனர்த்தத்தைக் குறித்து ஒருவன் தனியாய் வருத்தப்படுவது பலனில்லையென்றார். ஒரு தேசத்தில் வியாதி பஞ்சம் மழையின்மை முதலியன ஏதாகிலும் நேரிடின் எல்லோரும் சேர்ந்து தான் என்ன செய்ய நேரிடும். இது மனிதர்களால் உடனே மாற்றக்கூடிய தன்மையுள்ளதல்ல. இங்கு தெய்வத்தின் ஸகாயத்தையே விசேஷமாய் எதிர்பார்க்கவேண்டும். இவ்விதம் வீணில் வளர்ப்பானேன். இனிச் சொல்லவந்ததைச் சொல்லி விடுகிறேன்.

31—8—26. சுதேசமித்திரனில் காந்தியவர்கள் திருவல்லிக்கேணி சம்பவம் பால்யவிவாகத்தின் கொடுமை, என்று தலையங்கமிட்டு ஓர் விஷயம் தமது யௌவன இந்தியா பத்திரிகையில் பிரசுரித்திருப்பதைக் கூறியிருக்கிறார். சமீபத்தில் ஓர் பிராமண ஸ்திரீ தீப்பற்றி மைலாப்பூரில் இறந்துவிட்டதாயும் இறந்தவள் மரண வாக்குமூலத்தில் தனது பர்த்தா தன் மேல் எண்ணெயை ஊற்றி தீ வைத்ததாகவும் வாக்குமூலம் கொடுத்திறந்தாள். பிறகு அதைப்பற்றிக் கோர்ட்டில் நடவடிக்கையில் விசாரித்ததில் புருஷன் அவ்விதம் செய்ய நியாயமில்லையென்று தள்ளிவிட்டனர். மறுபடியும் இப்போது உலகத்தைக்கீழேக விழாது ஒரு கைகொடுத்துத் தூக்கத் தைரியமாய் மார் தட்டிநிற்கும் மாதுசிரோமணி சங்கத்தார் இறக்கமுற்று நம் தோழி இறந்ததை நாம் பேசாமல் விட்டு விடுவதா? அந்தப் புருஷனை விடமாட்டோம் என்று ஹைகோர்ட்டில் புனர் விசாரணைக்கு அப்பீல் செய்து கொண்டனர். அங்கும் ஆர அமர விசாரித்துப் புருஷனின் குற்றம் இல்லையென்றே விடுதலை செய்தனர். நடந்த விஷயம் இது.

இதில் இப்போது காந்திக்கு அத்புதமான ரகஸ்யம் இதிலிருந்து வெளியேறிவிட்டது. அதை இரண்டு கோர்ட்டாரும் அங்கு வாதித்த நிபுண வக்கீல்களும் மாதுசிரோன்மணி சங்கத்தாரும் அறியவே இல்லை. அது என்ன ரகஸ்யமென்றால், அது பால்ய விவாகக்கொடுமை எனப்படும். இதனையே காந்தி விவரித்திருக்கிறார். அதையே இங்கு எழுதுகிறேன்.

விபத்துக்கு ஆளான சிறுமிக்கு வயது 13. அவள் புருஷனுக்கு 26-வயது. புருஷன் பலவந்தமாக தன்னிச்சைக்கிணங்குமாறு வற்புறுத்தியதால் அவள் தற்கொலை செய்துகொண்டதாக ஜூரிகள் அபிப்பிராயம் கூறினர். அந்தப் பெண்ணுக்குக் கல்யாணமாகும் போது வயது 13 தான் என்பதும் புருஷனின் இச்சைக்குஇணங்க அவள் மறுத்ததால் அவளுக்குப் புணர்ச்சி இன்பத்தில் பிரியமில்லையென்பதும் புருஷன் பலாத்காரம் செய்தான் என்பதும் அவள் இறந்து போய்விட்டாள் என்பதும் எவராலும் மறுக்கமுடியாத உண்மைகள் என்பதே.

இவ்விதம் காந்தி அவர்கள் சொல்வதைக் கவனிப்பாம். இங்கு புருஷன் பலாத்காரம்செய்ததால் அவள் தற்கொலைசெய்துகொண்டாள் என்று ஜூரிகள் கூறியது தான் தத்துவமாய் இருக்கவேண்டுமா? இறந்தவளுக்குஜூரிகள் அபிப்ராயம் கொடுத்துத் தீரவேண்டியதை உத்தேசித்துச் சொன்ன காரணமாயும் அதை வைத்துக்கொள்ளலாமென்பது எனது எண்ணம். ஏனெனில், மோட்டாரிலோ அல்லது வேறு திடீரென்று ஏற்படக்கூடிய ஆபத்தால் ஒருவன் மரித்துவிட்டால் அதன் காரணம் யாவருக்கும் தெரிந்த விஷயமேயாயினும் அகஸ்மாத்தாய் ஏற்பட்ட மரணம் அல்லது வண்டியோட்டியின் அஜாக்கிரதையால் நேர்ந்த மரணமென்று ஜூரிகள் அபிப்பிராயம் கொடுத்த பிறகு தான் பிணம் சொந்தக்காரரிடத்தில் ஒப்புவிக்கப்படுகிறது. அதுபோல் பிரகிருதத்திலும் தான். இங்கு இவள் இறந்ததற்கு இது காரணமே இராது. ஏனெனில் இச்சை இல்லாத ஓர் ஸ்திரீயை தொந்தரவு செய்வதென்றால், இது ஒரு நாளிலேற்பட்டதாய் இராது. பல தினங்களில் ஏற்பட்டிருக்கலாம். அவ்விதம் தொந்தரவுசெய்வதைப் பெண் தாயினிடம் ரகஸ்யத்தில் சொல்லியிருப்பாள். அவள் மூலமாய்த் தகப்பனும் அறிந்திருப்பான். இவ்விதம் பரம்பரையாய்ப் புருஷனிடம் அவ்வார்த்தை எட்டும். பிறகு புருஷனின் மாமனான பெண்ணின் தகப்பனும் தாயும் பெண்ணைப் புருஷன் வீட்டிற்கனுப்பாமலே வைத்துக்கொண்டுவிடுவார்கள். இவ்விதம் நேருவது சிற்சிலவிடங்களிலுள்ளது. அவ்விதம் யாதொரு தகவலும் தாய்தந்தையர்களுக்கு எட்டியதாய் அவர்கள் சாக்ஷயத்தில் வெளியாகவில்லை. ஆகவே அவளது மரணத்

தின் காரணத்தை ஈசனே அறிவான். விஷயம் இவ்வாறிருக்க காந்தியவர்கள் சொல்லும் வார்த்தைக்கு அவர்களின் மனதே ஆதாரம். ஏனெனில் புருஷனும் ஸ்திரீயும் 13-நாள்கூட வாழ வில்லை என்று பரிதபிக்கிறார்கள். என்ன பரிதாபம் காந்தியவர் களுக்கு நேர்ந்துவிட்டது. இதிருக்கட்டும் இன்னொன்று இங்கு கவனிக்கத்தக்கது. இவ்விதம் மரணமடைய நேர்ந்தது பால்ய விவாஹகாரணமாகத்தானும் என்ன யுக்தி. பால்ய விவாஹம் இதற்கு எவ்விதம் காரணமாகும். இனி உலகத்தில் இறப்பவர் களுக்கெல்லாம் காந்தி காரணம் நிரூபித்துவிடுவார்போலும். எல் லாவற்றையும் பால்யவிவாஹக் கட்டுத்துறையிலேயே பூட்டிவிடு வார். உண்மை இதல்ல. காந்தியவர்கள் மதவிஷயத்தையும் அதற்காக ஏற்பட்டிருக்கும் அனுதிஸித்தமான வேதசாஸ்திரங் களையும் இருக்கின்றனவென்று தெரிந்துகொள்ளாததால் மனம் இளகிப்புலம்புகிறார். பாருங்கள்! இவ்விதம் இல்லாவிடில் அடுத் தாற்போல்

> "கொடுமையான ஒரு பழக்கத்தை எந்தமதம்ஆதரித்தாலும் அந்த மதத்தை மதமெனச் சொல்லக்கூடாது, என்கிறார்.

இது சரியா ? இனி எந்த மதத்திலாவது இவர் நினைக்கிற கொடு மையான ப்ழக்கமில்லையென்பதை நிரூபிக்க முன்வருவாரா? ஒரு போதும் முடியாது. ஆகவே எல்லா மதத்தின் ஸ்வரூபமறியாது இவ்விதம் தன் மனோராஜ்யமதத்தை ஸ்தாபிக்க ஸாஹஸம் செய் யும் இவரது கொடுமையான பழக்கத்தை ஒரு மதஸ்தனும் ஏற் றுக்கொள்ளமாட்டான். இதை வளர்ப்பானேன். தினசரிப் பத் திரிகைகளைப் படித்துப்பார்த்தால் ஒரு வருடத்தில் இவர் மனோ வபிப்பிராயப்படி நடக்கும் விவாஹங்களில்தான் கொலைகளும் புருஷனை விட்டுவிட்டு இன்னொருவனை மணப்பதும் முதலிய மிருக ஸ்வபாவங்கள் அதிகமாய்க் காணப்படுகின்றன. சாஸ்திரீயமான பால்யவிவாஹத்தில் நேரும் கெடுதல் 100க்கு 1ஆயின் மற்றதில் 100க்கு 20 நிரூபிக்கமுடியும். பால்யவிவாஹமென்ற கன்னிகா விவாஹஞ் செய்துகொள்ளும் பிராம்மணர்களுக்குள் அழகாய் வாழும் குடும்பங்களைப் பக்தியுடன் கணக்கிட்டுப் பார்த்தால் காந்தி இவ்விதம் சொல்லவே நேராது. ஸ்மிருதிகள் ஒன்றுக் கொன்று முறண்படுகின்றனவென்கிறார். இதுவும் ஸ்வரூபமறி

யாமற் கூறுவதே. கோர்ட்டில் ஒரே கேஸில் வாதிப்பிரதிவாதி வக்கீல் நேர்விரோதமாய் விவாதம் செய்கிறதைக்கொண்டு ஒன்றுக்கொன்று விரோதமுள்ளதென்று சொல்லிவிடுவது. அவ்விரண்டையும் நியாயாதிபதி சீர்தூக்கி பலாபலத்திற்குத் தக்கவாறு தீர்ப்புக் கூறுவதுபோல் முறண்போற்காணப்படுகிற ஸ்மிருதி தாத்பரியத்தைப் பரமாசார்யர்களிடம் பணிவிடைசெய்தன்றோ தெரிந்துகொள்ளல்வேண்டும். இச் சம்பிரதாயமறியாத காந்தி ஸ்மிருதி முறண்படுகிறதென்று வாய்கூசாமல் சுலபமாய்ச் சாற்றிவிட்டார்.

மற்றுமிவர் நம் மதாசார்யர்களையும் அவதாரமுனிவர்களையும் சற்றுமச்சமின்றித் திட்டுகிறார். பாருங்கள்.

"தன்னடக்கம் வேண்டுமென வற்புறுத்தி எழுதிய ஒருவர் அதே சமயத்தில் மிருகஇச்சையில் மனத்தைச் செலுத்துவதற்கு ஆதாரம்காட்டி எழுதியிருக்கமுடியாது. யுக்த வயதடையுமுன்பே அதாவது ருதுவாவதற்கு முன்பே ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் செய்துவிடாவிட்டால் பாபம் ஸம்பவிக்குமென நினைப்பவர் தன்னடக்கமென்பதையே அறியாதவர்களாயிருக்கவேண்டும். இன்றேல் துன்மார்க்கச் செயல்களில்ஈடுபட்டவர்களாகஇருக்கவேண்டும். என்கிறார். இது காந்தி வார்த்தை. இதைக் கவனித்துப் பார்ப்போம்.

தன்னடக்கம் வேண்டுமென்று எழுதியவர் ஒருவரல்ல. இருவரல்ல. அனேக மஹரிஷிகள். அவர்கள் மிருக இச்சையில் மனதைச்செலுத்துவதற்குஆதாரம் காட்டி எழுதியிருக்கமுடியாதென்பதுமட்டிலும் போதாது. தன்னடக்கத்தைவிரும்புபவன்பௌதிக மானிடதேக ஸம்பந்தமான விருப்பத்திலேயே மனதைச் செலுத்தாமலிருக்கத்தான் எழுதியிருக்கிறார்கள். இவ்விஷயம் காந்திக்குத் தெரிய நியாயமில்லை. இனி இவர் தன்னடக்கம் என்பதற்கு என்ன அர்த்தம் கொண்டிருக்கிறாரோ தெரியவில்லை. இதற்கு இவர் மிக விபரீதமாய்த்தான் அர்த்தம்கொண்டிருக்கிறாரென்பது நிச்சயம்.

(தொடரும்)

எம், என். சுப்பிரமணியசாஸ்திரி.

# வித்வத்சிரோமணி மண்டலம்,

## சிதம்பரம்.

---

சென்ற செப்டம்பர்-மீ 20உ திங்கள்கிழமை மாலை 4-மணிக்கு இம்மண்டலத்தின் ஆதரவின்கீழ் வித்வான் சிரோமணி பட்டம் வஹித்த பல பண்டிதர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அச்சமயம் ஸ்ரீ மீனாக்ஷி காலேஜ் ஸம்ஸ்கிருதபண்டிதர் மீமாம்ஸா சிரோமணி பிரும்மஸ்ரீ வெங்கடராமதீக்ஷிதர் அவர்கள் தலைமைவஹித்தார்கள். அக்கூட்டத்தில் நிறைவேறின தீர்மானங்களாவன :—

I கீழ்நாட்டுக் கல்வியை வளர்ப்பதன்பொருட்டு நவீன விமர்சரீதியை அனுஸரித்துத் தென்மொழி வடமொழி ஆங்கிலம் ஆகிய மும்மொழியில் ஓர் பத்திரிகையைப் பிரசுரிப்பதன் நிமித்தம் அறிஞர்களான பொதுஜனங்களின் உதவி வேண்டப்படுகிறது. தற்காலம் கையெழுத்துப் பிரதியாகவியாசங்கள் தயாரித்து வைக்கப்படும்.

II இம்மண்டலத்தின் சார்பாக ஓர் புத்தகசாலை திறக்கப்படும். அதற்கும் தனரூபமாகவும் புத்தகரூபமாகவும் பொதுஜனங்களின் உதவி வேண்டப்படுகிறது.

III இத் தென்னிந்தியாவில் வைதிகமதபிரசாரம் செய்யுமாறு பண்டிதர்கள் வேண்டியிருப்பின் இம்மண்டலம் தக்க பண்டிதர்களை அனுப்பி உதவிபுரியும். ஆனால் அவ்விருப்பமுடையார் அதனால் ஏற்படும் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

IV வித்வத்ஸபை (Senate) முதலியவைகளில் ஆங்கலகலாசாலை (Colleges) த் தலைவர்களைப்போல் ஸம்ஸ்கிருத கலாசாலைத் தலைவர்களையும் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்குமாறு சென்னைக் கல்வியிலாகா சட்டங்கள் திருத்தி யமைக்கப்படவேண்டும்.

இங்ஙனம்,

வித்வத்சிரோமணி மண்டலம், சிதம்பரம். } N. வைத்தினாதசாஸ்திரி,
காரியதரிசி.

---

காலங்கள்தோறும் அந்த ஏகாம்பரநாதருக்கு அந்த அம்பிகையை விவாஹம் செய்துவருவாய். அந்த அம்பிகையைப் போலவே விக்கிரஹங்கள் நிர்மாணஞ்செய்து அவைகளில் அந்த ஏகாம்பிகையை ஆவாஹித்து இங்குள்ள சிவாலயங்கள்தோறும் மூலலிங்க சக்திகளாக அமைத்துச் சிவதரிசனத்தோடு அம்பிகையையும் தரிசித்து மகிழ்வாய். அந்த விக்கிரஹ ரூபமாயிருக்கின்ற அந்த அம்பிகைகளன்றி வேறு மூலசக்திகள் இந்த க்ஷேத்திரத்தில் பிரதிஷ்டைசெய்தல்கூடாது.

"ஓ கமலாசனனே, சுவர்ணகாமாக்ஷியை ஏகாம்பரநாதருக்குக் கலியாணம் செய்தல் வேண்டுமென்று சொன்னேனல்லவா! அந்த முறைமையைக்கேட்பாய். ஏகாம்பரநாதருடைய கலியாண தினத்தில் இந்த ஆலயத்திலிருக்கும் சுவர்ணாம்பிகையை ஏகாம்பரநாதருடைய ஆலயத்தில் எழுந்தருளச்செய்து விதிமுறையாக இருவருக்கும் கலியாணம் நடத்தி மறுநாள் சாயங்காலம் உற்சவ கோலமாய் வீதியில் வலமாக வரச்செய்யும்போது கலியாணகோலத்துடன் விளங்கும் சுவர்ணாம்பிகையை என்னுடைய ஆலயத்தில் எழுந்தருளச்செய்துவிட்டு அதன்பின்னர் கலியாணமூர்த்தியாகிய ஏகாம்பரநாதரை அவருடைய ஆலயத்தில் எழுந்தருளச்செய்தல்வேண்டும். பின்னர் சுவர்ணகாமாக்ஷிதேவிக்கு அவளுடைய ஸ்தானமாகிய த்ருவஸ்தானத்தில் இரண்டுநாள் பூஜை முதலியவைகள் நடவாமற்போனபடியால் அதனுடையபரிஹார நிமித்தமாயுள்ள சாந்தியை உத்தேசித்துவைதிகதந்திரானுசாரமாய்ச்சிடர்களோடுகூடியிருக்கும் துர்வாஸமஹருஷிமுகமாகஸஹஸ்ரகலாசாபிஷேகம் முதலிய பூஜோபசாரங்களைவிசேஷமாகச்செய்து அதன் பின்னர் நித்தியபூஜையை நடத்தி உனக்குவேண்டியமனோரதங்களைப்பெறுவாயாக. அதுபோலவேவருஷந்தோறும் உற்சவம்நடந்துவரும்படியான மார்க்கத்தையும் தேடிவைத்துப் பின்னர் உனது உலகத்தையடைவாய்'' என்று அனுக்கிரஹம்செய்து பராசக்தி ஸ்வரூபத்தில் ஐக்கியமாய்த் தம்மிடத்தில் ஐக்கியமாயிருந்த சகல க்ஷேத்திரவாஸினிகளாகிய ஸர்வசக்திகளையும் அந்தந்த க்ஷேத்திரங்களிலும் எழுந்தருளியிருந்து யாவருக்கும் காக்ஷிகொடுக்கும் வண்ணம் செய்தனர். அதுபோலவே அந்தச் சக்திகளெல்லாம் அந்தந்த மூலபிம்பங்களில் கலந்து பிரகாசித்தன.

## சுவர்ணகாமாக்ஷி ஆவிர்ப்பாவம்.

கௌரியாகிய அம்பிகைக்குச் செய்யவேண்டிய கலியாணச் சடங்கு முதலியவற்றைப் பிரமதேவனுக்குத் திரிபுராம்பிகை கூறியபின்னர் அவருடைய நெற்றியினின்றும் சித்ஸ்வரூபிணியாய்க் கௌரீ என்னும் அம்பிகை ஜோதிஸ்வரூபமாய்ப் பிரசன்னையாயினள். அவ்வம்பிகையைப் பிரமதேவன் கண்டு அதிசயித்துப் போற்றி வணங்கி அந்த க்ஷணத்திற்றானே திரிபுராம்பிகை ஆக்ஞைசெய்தவண்ணம் சுவர்ணத்தினால் அந்த அம்பிகையைப் போலவே விக்கிரஹம் நிர்மாணம் செய்தனன்,

## திருவுருவம்.

அன்றலர்ந்த தாமரைமலர்போன்ற இரண்டுகண்களையுடைத்தாயும், இரண்டு புஜங்களையுடைத்தாயும், அவற்றுள் வலதுதிருக்காம் கிளியைத் தாங்கியிருப்பதாயும் இடதுதிருக்காம் தொங்கவிட்டிருப்பதாயும் உதாம் திரிபங்கி (மூன்று மடி) யோடு கூடினதாயும் தென்பாரிசம் வில்போலும் சாயலுடைத்தாயும் இடை நுண்ணியதாயும் ஏனைய உருப்புக்களெல்லாம் தத்தமக்குரிய ஆபரணவகைகளால் பிரகாசிப்பனவாயும் பீதாம்பரதரையாயும் விளங்கச்செய்தனன். இந்தக் கோலமாகத்தான் திரிபுராம்பிகையினுடைய நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய கௌரி என்னும் அம்பிகையினுடைய கோலமும் விளங்கிற்றென்று அறிதல் வேண்டும்.

## ஆவிர்ப்பவித்தகாலம்.

சுவேதவாராஹகல்பம், ஏழாவதாகிய உச்சியம் என்கிற மன்வந்தாம்; தாமசகாலம்; கிருதயுகம்; ஹயக்ரீவர் அவதாரகாலம்; ஸ்ரீமுகவருஷம் சூரியன் துலாத்தில்இருக்கும் சமயம்; கார்த்திகை மாதம்; கிருஷ்ணபக்ஷம்; தசமிதிதி; சுக்கிரவார உதயம்; பூர்வ பல்குனி நக்ஷத்திரம்; மத்தியபாதம் சூரியோதயகாலம் இந்தச் சுபதினத்தில் பராசக்தியினுடைய நெற்றிக் கண்ணினின்றும் கௌரி தோன்றினாள்.

## பிரதிஷ்டை செய்த வரலாறு.

பிரமன் தனக்குக் காக்ஷிகொடுத்த அம்பிகையைப்போலவே சுவர்ணத்தினால் விக்கிரஹம்செய்து அமைத்தபின்னர் அந்த விக்

கிரஹமூர்த்தியைப் பிலத்துக்குத் தென்பக்கத்தில் த்ருவஸ்தானம் (நிலையாயுள்ளவிடம்) என்று ஒரு பெயரிட்டு அந்த இடத்தில் பிரதிஷ்டைசெய்து, பிரதிஷ்டைசெய்த அந்த மாதமாகிய ஐப்பசி மாதந்தொடங்கி அந்த மாதத்துக்கு ஆறுவதுமாதமாகியபங்குனி மாதம் வரையில் விசேஷ நிபாசபூர்வகமாய் மஹாபிஷேக நைவேத்திய பூஜோபசாரங்களை விசேஷமாகச் செய்துவந்து ஏகாம்பரநாதருடைய கலியாணதினத்தில் சுகந்தாதருடைய ஆலயத்தில்எழுந்தருளச்செய்து இந்த அம்பிகைக்கும் அந்த ஏகாம்பரநாதருக்கும் வேதாகமோக்த விதிமுறையாக விவாகம் நடத்தி மறுநாள் கலியாணகோலத்துடன் உற்சவம் நடத்தி ஏகாம்பரநாதரை அவருடைய ஆலயத்தில் எழுந்தருளும்படியாக அவருடைய பரிவாரங்களுடன் அவரை அனுப்புவித்து சுவர்ண காமாக்ஷியை அவருடைய ஆலயமாகிய த்ருவாலயத்தில் எழுந்தருளச் செய்து முன் சொல்லியவாறு சாந்தி அபிஷேகாதி உபசாராதிகளை நடத்திப் பின்னர் ஓர் தாமரை மலரை எடுத்து அம்பிகையைத் தியானித்து ஆகாயத்தில் விட்டெறிந்தனள். அந்த மலர் ஆகாயத்தில் பட்டவுடன் சந்திரனுடைய அம்சமாக ஒரு சக்கரவர்த்தி வெளிப்பட்டு வந்தனன். அவனிடத்தில் அந்தப் பிரமதேவன் தான் செய்த கலியாண மகோற்சவம் வருடந்தோறும் நடத்தி வரும் வண்ணம் நாசமில்லாததாகிய 'தன்பாத்திரம்' ஒன்றைக் கொடுத்து "நீ இந்த உற்சவத்தை நடத்தி வரவேண்டுமென்று ஆக்ஞை செய்து ஆகாச பூபாலன் என்கிற நாமத்துடன் இந்த நகரத்தில் வாழக்கடவாய்" என்று ஆசிர்வதித்து அவ்வரசனை அங்கிருக்கச் செய்து ஸ்ரீ காஞ்சி மண்டலத்திலும் பூமண்டலத்திலுமுள்ள சிவாலயங்கள்தோறும் சென்று அங்கங்கும் அம்பிகைகளைப் பிரதிஷ்டை செய்து சிவபெருமானோடு அம்பிகைகளையும் தரிசனம் செய்து மகிழ்ந்து தன்னுலகம் போய்ச் சேர்ந்தனன்.

இனிப்பிரமனுக்கு அந்தகத்வம் வர அதற்குக் கலைமகள் கூறிய பரிகாரவியல் வருமாறு:—

பிரமதேவன் சத்தியலோகம் போய்ச் சேர்ந்தவுடன் இரு கண்களும் ஒளி மழுங்கிப்போய் அந்தகனாயினன். அதனால் அவன் மனவருத்தமுற்றிருக்கும்பொழுது கலைமகள் "எனது நாய

கனே, உமக்கு நேத்திர பங்கம் வந்ததற்குக் காரணம் கூறுகி றேன் கேளும். என்னேஎனின், காஞ்சிக்ஷேத்திரத்தில் காமகோடி பீடத்தில் காயத்திரி மண்டபத்துக்கு அடியில் எதுவரையில்பிலா காசமோ அதுவரையில் குண்டலினிக்கிரகம் என்கிற நாமத்தால் பூர்வத்தில் சிவபெருமானால் நிர்மிக்கப்பட்டுள்ளது. அந்தவிட த்தை நீர் காலால் மிதித்து வந்தமையால் அந்தகத்வம் வந்தது. இனி நீர் முன்போலவே அவ்விடத்துக்குப்போய் ஸ்ரீ சக்கர பூஜையைச் செய்வீராயின் நிவர்த்தியாய் விடும். இல்லாவிடின் இந்தக் கண் குருடு ஒரு நாளும் நீங்காது. இதிற் சந்தேகமில்லை" என்று கலைமகள் சொல்லியபொழுது பிரமன் "இந்த விதி உன க்கு எப்படித் தெரியவந்தது" என்று கேட்டனன்.

கலைமகள் "ஓ, சிருஷ்டிக்கத்தரே, சிவபெருமான் ஸ்ரீசக்காப் பிரதிஷ்டை செய்யும் பொழுது இந்த ஸ்ரீ சக்கர பூஜையை ருத்தி ரயாமளம் என்னும் தேவிதந்திரத்திற் சொல்லியிருக்கும் முறை யாகப் பூஜிக்கவேண்டும் என்று இந்த விடத்தை மிதிப்பவர் கண் குருடாய்ப்போவார்கள் என்றும் அதற்குப்பரிகாரம் மீளவும் வந்து பூஜித்தால்தான் என்றும் கூறியிருக்கின்றனர். ஆகலான் நீரும் போய்ச்செய்யும் என்று சொல்லப் பிரமதேவன் மகிழ்ந்த வனாய் அந்தக் கலைமகளுடன் காமகோட்டத்தையடைந்து ஸ்ரீசக் கா பூஜைசெய்து அந்தகத்வம் நீங்கப் பெற்றுச் சுவர்ணகாமாக்ஷி யைக்கண்ணாரக்கண்டு களிப்படைந்து 'எவனொருவன் காமகோடி பீட ஸ்தானத்தில் காலைவைப்பதனாலுண்டாகும் பாவத்தையடை கின்றானோ அவன் இந்தச் சுவர்ணகாமாக்ஷிதேவியைத் தரிசனம் செய்த மாத்திரத்தில் அந்தப் பாவத்தினின்றும் நீங்குவான். அந் தத்தரிசனம் கிட்டாமற் போகுமாயின் ஸ்ரீ சக்காபூஜையை ருத் திரயாமள தந்திரத்தில் கூறியுள்ளபடிச் செய்வானாயின் அந்தப் பாபத்தினின்றும் நீங்குவான்" என்று வரங்கொடுத்துத் தன்னு லகம்போய்ச் சேர்ந்தனன்.

இனிப்பிரமதேவன் தன்னாத்ம தேவியாகப் பூஜித்த சர்வா னுக்கிரக மூர்த்தியாய் விளங்கும் சுவர்ணாம்பிகைக்கும், த்ருவா தேவியாகிய தபஸ் காமாக்ஷிக்கும், பராசக்தியாகிய திரிபுராம் பிகைக்கும் காரணப்பெயர்களாயுள்ள பஞ்சநாம விவரணம் வருமாறு:—